# NEHRU MEMORIAL COLLEGE

(Autonomous, Accredited with `A` Grade by NAAC & Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

Puthanampatti-621007, Tiruchirappalli- District

# M.Phil., Tamil

**Course Structure and Syllabus under CBCS**

**(For the candidate admitted from the academic year 2019-2020 onwards)**

**M.Phil. TAMIL (FT/PT) PROGRAMME**
**(for the candidates to be admitted from the academic year 2019-20 onwards)**

## ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பின் நோக்கம் (PROGRAMME OBJECTIVES)

1. தமிழியல் ஆய்வுகளுக்கு வித்திடல்.
2. ஆய்வுத் திறனை உண்டாக்குதல்.
3. ஆய்வியல் நெறிகளை அறியச்செய்தல்.
4. ஆய்வு நுட்பங்களை உணரச் செய்தல்.
5. ஆய்வு அணுகுமுறைகளை அறியச்செய்தல்.
6. செம்மையான ஆய்வினை நிகழ்த்த வழிகாட்டல்.
7. ஆய்வின் கல்வி, சமூகவியல் பயன்களை உணர்த்துதல்.
8. கற்றல், கற்பித்தல் திறன்களை மேம்படுத்துதல்.

**PROGRAMME STRUCTURE**

| Semester | Course | Title of the Paper | Exam Hours | Credits | Marks | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | LA | Ext.E | Total |
| I | Course I | ஆராய்ச்சி நெறிமுறைகள் | 3 | 4 | 25 | 75 | 100 |
| | Course II | தமிழாய்வுக் களங்கள் | 3 | 4 | 25 | 75 | 100 |
| | Course II | கற்பித்தல், கற்றல் திறன்கள் | 3 | 4 | 25 | 75 | 100 |
| | Course IV | Paper on Topic of Research (The syllabus will be prepared by the Research advisor ) | 3 | 4 | 25 | 75 | 100 |
| II | Dissertation & Viva-Voce | Dissertation 150 Marks<br>Viva 50 Marks | - - - | 8 | - - - | - - - | 200 |
| | **Total** | | | **24** | - - - | - - - | **600** |

## ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பின் கல்விசார் விளைவுகள் ( PEO)

1. ஆய்வியலின் அடிப்படைகளை அறிந்துகொள்வர்.
2. ஆய்வு மொழி நடை, ஆய்வு நெறிமுறைகளை அறிவர்.
3. தமிழ் ஆய்வுக் களங்கள், தமிழ் ஆய்வுப் போக்குகள் குறித்துத் தெளிவு பெறுவர்.
4. முறையான ஆய்வேடுகள் உருவாகும்.
5. புதியவற்றைக் கண்டு வெளிப்படுத்தும் வேட்கை கொள்வர்.
6. விருப்பு, வெறுப்பற்ற மதிப்பீட்டுப் பண்பினைப் (விமர்சனப் பண்பினை) பெறுவர்.
7. தன் கருத்தை உரிய சான்றுகளுடன் நிறுவும் ஆற்றலைப் பெறுவர்.
8. பிறர் கருத்தை நகரிகமான முறையில் மறுக்கும் பண்பினைப் பெறுவர்.
9. பாரட்டும் திறனையும் சுவையுணர் திறனையும் வளர்த்துக் கொள்வர்.
10. தேடல் பண்பிலும், தேர்வு செய்யும் பண்பிலும் சிறந்து விளங்குவர்.
11. தன்னம்பிக்கை, விடாமுயற்சி, கடின உழைப்பின் அருமையினை உணர்வர்.

## ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பின் குறிப்பிடத்தக்க விளைவுகள் ( PSO )

1. முனைவர் பட்ட ஆய்வைச் சிறப்பாக மேற்கொள்வதற்கான ஆய்வுப் பட்டறிவைப் பெறுவர்.
2. கல்லூரி ஆசிரியர் பணிக்கான கூடுதல் தகுதி பெறுவர்.
3. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், இந்திய மொழிகளின் மைய நிறுவனம் முதலான நிறுவனங்களில் ஆராய்ச்சித் திட்டப் பணிகளில் பணி வாய்ப்பு பெறுவர்.

**தாள் 1**
**ஆராய்ச்சி நெறிமுறைகள்**

## பாடத்தாளின் நோக்கங்கள் (Course Objectives)

1. ஆய்வியல் அடிப்படைகளை அறியச் செய்தல்.
2. ஆய்வு நெறிகளை உணர்த்துதல்.
3. களஆய்வு முறைகள் குறித்து விரிவாக அறியச் செய்தல்.
4. அறிவியல் அணுகுமுறைகளை அறிந்துகொள்ளச் செய்தல்.
5. ஆய்வேட்டின் கட்டமைப்பு முறையினை அறியச் செய்தல்.

## அலகு 1

ஆய்வு - சொல் மூலம் - சொற்பொருள் - ஆய்வு விளக்கம் - இலக்கியங்களில் காணலாகும் ஆய்வு பற்றிய குறிப்புகள், விளக்கங்கள், உரையாசிரியர்களின் ஆய்வு நெறிகள் - ஆய்வு நோக்கம் - ஆய்வுப்பயன் - ஆய்வுப்பொருண்மையைத் தேர்ந்தெடுத்தல் - ஆய்வுத் தலைப்பை இனங்காணுதல் - ஆய்வாளர் தகுதிகள் - ஆய்வு மொழிநடை.

## அலகு 2

ஆய்வுச் சிக்கலும் கருதுகோளும், ஆய்வுப்பொருள் சிக்கல் – சிக்கல் வகைகள் - ஆய்வுச் சிக்கலை இனங்காணுதலும் பகுத்துணர்தலும் - ஆய்வுச் சிக்கலின் தகவல் அறிதலும் உறுதிப்பாடும் - சிக்கலை மையமிட்ட தலைப்புத் தெரிவு - கருதுகோள் - கருதுகோளின் தேவை - கருதுகோளின் வகைகள் - எளிய கருதுகோள் - மாற்றுக் கருதுகோள் - பயனில் கருதுகோள் - எதிர்மறைக் கருதுகோள்.

## அலகு 3

கள ஆய்வுகள், கருதுகோள், கள ஆய்வியல் களப்பணி - விளக்கம் - களப்பணியின் தேவை - திட்டமிடல் - கள ஆய்வுக்குத் தேவையான கருவிகள் - காலம் - சேகரிக்கும் இடம், சூழல் - தகவலாளி அணுகுமுறை -

நேர்காணல், வினா நிரல், வாய்மொழி மரபுச் செய்திகள், தகவல்கள் திரட்டுதல் - வகைப்பாடு - தரவு திரட்டல் - நூலகப் பயன்பாடு - குறிப்பு அட்டைகள் - நூல்கள் -ஆய்வேடுகள் - தரவுகளைச் சேகரிப்பதில் கணினியின் பங்கு - தமிழ் ஆய்வில் இணையத்தின் பயன்பாடு – இணைய நூலகங்கள் - தமிழ் ஆய்வு மின்னிதழ்கள் - தமிழ் ஆய்வு வலைதளங்கள்- வலைப்பூக்களிபயன்பாடு - கணினிச் செயலிகள்.

**அலகு 4**

**ஆய்வு முறைகள் , அணுகுமுறைகள்**

ஆய்வு முறைகள் - தனிநிலை ஆய்வு முறை (Case Study Method), பயன்பாட்டு ஆய்வு முறை (Applied Research), ஒரு துறைசார் ஆய்வு (Mono disciplinary Research), பலதுறைசார் ஆய்வு (Interdisciplinary Research), விதியுணர் முறை (Normative Method), உய்த்துணர் முறை (Deductive Method), பகுப்பு முறை ஆய்வு (Analytical Research), தொகுப்பு முறை ஆய்வு (Synthetic Research), தருக்க முறை ஆய்வு (Logical Method), அளவீட்டு முறை ஆய்வு (Survey Method), புள்ளியியல் முறை ஆய்வு (Statistical Method), வரலாற்று ஆய்வு முறை (Historical Method), ஒப்பியல் ஆய்வு (Comparative Method), விளக்க முறை ஆய்வு (Descriptive Method), கள ஆய்வு முறை (Field Method),

ஆய்வு அணுகுமுறைகள் - சமூகவியல் அணுகுமுறை (Sociological Approach), உளவியல் அணுகுமுறை (Psychological Approach), தத்துவவியல் அணுகுமுறை (philosophical Approach) - அமைப்பியல் அணுகுமுறை (Systems Approach), வடிவவியல் அணுகுமுறை (Formalistic Approach), நவீனத்துவ அணுகுமுறைகள் (Modernism, Post-Modernism).

**அலகு 5**

ஆய்வேட்டின் கட்டமைப்பு - ஆய்வுப்பொருள் அமைப்பும் இயல் பாகுபாடும் - இயல் அமைப்பு - இயல்களின் வைப்பு முறை, ஆய்வு

அறிமுகம், முடிவுகளை வழங்குதல், மொழி நடைச்செம்மை, முந்தைய ஆய்வுகளைக் கூறல், உடன்படல் - மறுத்தல் - மேற்கோள் காட்டும் முறைமை - ஆய்வு நாகரிகம், அடிக்குறிப்புகள், சுருக்கக் குறியீட்டு விளக்கம், சில வரையறைகள் - எழுத்துப் புள்ளி அளவு, வரிகளின் இடைவெளி, பக்க வரையறை, கட்டமைப்பு முறை(Binding Method), ஆய்வேட்டின் அட்டை, ஆய்வாளர் உறுதிமொழி, நெறியாளர் சான்றிதழ், பின்னிணைப்புகள் - முதன்மை நூற்பட்டியல், துணை நூற்பட்டியல், பார்வை நூல் பட்டியல், படங்கள், தகவலாளர் பட்டியல், தேவையான பிற பின்னிணைப்புகள், பிழைதிருத்தம், ஆய்வேட்டு வடிவமைப்பில் கணினியின் பயன்பாடு.

**கற்றல் விளைவுகள் (Course Outcome)**

1. ஆய்வு என்பது குறித்து முழுமையாக அறிந்து கொள்வர்..
2. ஆய்வு அணுகுமுறைகளை அறிந்து கொள்வர்.
3. ஆய்வுப் பொருண்மையைத் தேர்ந்தெடுக்கும் அறிவு பெறுவர்.
4. ஆய்வுச் சிக்கல்களை இனம் காணும் திறன் பெறுவர்..
5. கருதுகோள் குறித்து முழுமையாக அறிவர்.
6. தரவு சேகரித்தலின் நுட்பத்தை உணர்வர்.
7. களப்பணிக்குத் தகுதி பெறுவர்.
8. ஆய்வில் நவீனத் தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அறிவர்.
9. ஆய்வேட்டைக் கட்டமைக்கும் திறன் பெறுவர்.

**பார்வை நூல்கள்**


1. ஆய்வியல் அறிமுகம் தமிழண்ணல், இலக்குமணன், எம்.எஸ், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – 1977.
2. ஆய்வியல் நெறிமுறைகள் கு.வெ. பாலசுப்ரமணியன், உமா நூல் வெளியீட்டகம், தஞ்சாவூர், 2001.

3. ஆய்வியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும் – எஸ்.என். கணேசன், டயோனிசியஸ் புக் சர்வீசஸ், சென்னை.
4. ஆய்வுக்கட்டுரை எழுதும் முறை, முத்துச்சண்முகம், வேங்கடராமன், சு., சர்வோதயா இலக்கியப்பண்ணை, மதுரை.
5. இலக்கிய ஆராய்ச்சி நெறிமுறைகள், முத்துச்சண்முகம், சு. வேங்கடராமன் முத்துப்பதிப்பகம், மதுரை – 1979.
6. நாட்டார் வழக்காற்றியல், கள அய்வு, தே. லூர்து, பாரிவேள் பதிப்பகம், பாளையங்கோட்டை.
7. தமழில் கணிப்பொறியில் – ச. பாஸ்கரன், உமா பதிப்பகம், தஞ்சாவூர்.
8. கணிப்பொறி ஓர் அறிமுகம் – இராம்குமார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
9. இணையமும் இனிய தமிழும் – க. துரையரசன், இசைப்பதிப்பகம், கும்பகோணம்.
10. தமிழும் கணிப்பொறியும், ஆண்டோ பீட்டர், கற்பகம் புத்தகாலயம் சென்னை.
11. இணையமும் தமிழும், துரை.மணிகண்டன், இணையமும் தமிழும், நல்நிலம் பதிப்பகம், சென்னை.

## தாள் 2

## தமிழாய்வுக் களங்கள்

### பாடத்தாளின் நோக்கங்கள் (Course Objectives)

1. பல்வேறு நிலைகளில் தமிழில் நிகழ்ந்துள்ள ஆய்வுகளை அறியச் செய்தல்.
2. தமிழில் ஆய்வு நிகழ்த்தக் கூடிய ஆய்வுக் களங்களை அறிமுகப்படுத்துதல்.
3. புதிய நோக்கிலான ஆய்வுக்களங்களை இனம் காட்டுதல்.
4. தமிழாய்வுப் போக்குகளை அறியச் செய்தல்.

### அலகு 1

இலக்கண ஆய்வுகள்- எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி குறித்து தொல்காப்பிய காலம் முதல் இன்றுவரை வந்துள்ள இலக்கண நூல்கள், இலக்கண நூல்களின் அமைப்பு, நுவல் பொருள், தமிழ் இலக்கணங்களின் தனித்தன்மைகள், உரைநடை இலக்கண நூல்கள் - இலக்கண நூல்களில் நிகழ்ந்த மாற்றங்கள், இலக்கண வரையறைகளில் இன்றைக்குப் பொருந்தும், பொருந்தாக் கூறுகள் - இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், புதிய களங்கள்.

### அலகு 2

இலக்கிய ஆய்வுகள் - சங்க இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், சமய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், மறுமலர்ச்சிக் கால இலக்கியங்கள், சித்தர் பாடல்கள், இக்கால இலக்கியங்கள்- சிறுகதை, புதினம், நாடகம், உரைநடை முதலான இலக்கியங்கள், படைப்புத் திறனாய்வுகள், மானிடவியல், சமூகவியல், உளவியல், அறிவியல், பெண்ணியம், பெரியாரியம், மார்க்சியம் முதலான பல்வேறு நோக்குகள் - இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், புதிய களங்கள்.

## அலகு 3

தமிழோடு தொடர்புடைய துறைகள் - வரலாறு, மானிடவியல், தொல்லியல், சுவடியியல், அகராதியியல், கல்வெட்டியல், கோயிற்கலை, நுண்கலைகள், மொழிபெயர்ப்பியல், பதிப்பியல், ஊடகவியல் – அச்சு ஊடகங்கள், மின் ஊடகங்கள் கணினியியல், இவை போன்ற பிற துறைகள் - இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், புதிய களங்கள்.

## அலகு 4

ஒப்பாய்வியல் - ஒரு மொழிக்கு உள்ளே உள்ள ஒப்பாய்வுக் களங்கள் இரு இலக்கணங்களுக்கு இடையேயான ஒப்பாய்வுகள் (தொல்காப்பியமும் நன்னூலும், தொல்காப்பியரின் புறத்திணைக் கோட்பாடுகளும் புறப்பொருள் வெண்பா மாலையும் போல்வன) இரு இலக்கியங்களுக்கு இடையேயான ஒப்பாய்வுகள் (கம்பரும் திருவள்ளுவரும், கம்பராமாயணமும் இராவண காவியமும் போல்வன) இலக்கண, இலக்கியங்களுக்கு இடையேயான ஒப்பாய்வுகள் (தொல்காப்பிய புறத்திணைக் கோட்பாடுகளும் புறநானூறும், தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாடுகளும் - அகம்சார்ந்த இக்காலப் புதுக்கவிதைகளும் போல்வன)- இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், புதிய களங்கள்.

இரு மொழிகளுக்கு இடையேயான ஒப்பாய்வுகள் இலக்கிய ஆய்வுகள் (கம்பனும் மில்டனும், கம்பரும் வான்மீகியும், ஹோமரின் இலியட் – வியாசரின் மகாபாரதம், தமிழ், மலையாள இலக்கண ஒப்பாய்வுகள்), இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், புதிய களங்கள்.

## அலகு 5

நாட்டுப்புறவியல் - நாட்டுப்புற பாடல்கள், பழமொழிகள், நாட்டுப்புற கதைகள். கதைப் பாடல்கள், நாட்டுப்புற வழிபாடுகள், சடங்குகள், நாட்டுப்புறத் தொழில்கள், நாட்டுப்புறப் புழங்கு பொருட்கள், நாட்டுப்புற விளையாட்டுகள், நாட்டுப்புற மருத்துவம், நாட்டுப்புற உணவு முறைகள்,

நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புற கைவினைப் பொருள்கள், நிர்வாக மேலாண்மை, பிற நாட்டுப்புறக் கூறுகள் - இதுவரை வெளிவந்துள்ள ஆய்வுகள், புதிய களங்கள்.

## கற்றல் விளைவுகள் (Course Outcome)

1. ஆய்வுப் பொருண்மையைத் தெரிவு செய்யும் தெளிவு பெறுவர்.
2. தமிழில் இதுவரை நிகழ்ந்துள்ள ஆய்வுகள் பற்றிய தெளிவினைப் பெறுவர்.
3. பன்முக நோக்கில் தமிழில் நிகழ்ந்துள்ள ஆய்வுகளை அறிவர்.
4. நாட்டுப்புற ஆய்வுகள் குறித்த களங்களையும், தேவையினையும் உணர்வர்.
5. தமிழோடு தொடர்புடைய பிற துறைகளில் ஆய்வு நிகழ்த்தவேண்டிய தேவையினை உணர்வர்.

**பார்வை நூல்கள்**


1. இலக்கண ஆய்வடங்கல், முனைவர் பட்டாபிராமன், பதிப்புத்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
2. ஆய்வுக் களங்கள், நா.கடிகாசலம், பதிப்புத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.
3. சங்க இலக்கிய ஆய்வுகள்- செய்தனவும் செய்ய வேண்டியனவும், கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.
4. சங்க இலக்கிய ஆய்வுகள்- டாக்டர் அமிர்தலிங்கம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.
5. திராவிட மொழிகளின் ஒப்பாய்வு (ஓர் அறிமுகம்) டாக்டர் ஜி.ஜான் சாமுவேல் முல்லை நிலையம், சென்னை,
6. தமிழாய்வுக் களங்கள், மாநிலக் கல்லூரி, சென்னை.

7. சங்க இலக்கிய ஒப்பீடு – இலக்கியக் கொள்கைகள், தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1979.
8. Tradition & Talent in Sangam Poetry, Thamizhannal, Madurai Publishing House, Madurai, 1976.
9. ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், கதிர் மகாதேவன், லட்சுமி வெளியீடு, மதுரை, 1977.
10. வரலாற்று நோக்கில் சங்க இலக்கிய பழமரபுக் கதைகளும் தொன்மங்களும், முனைவர் பெ.மாதையன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
11. ஐங்குறுநூறு உருபனியல் பகுப்பாய்வு முனைவர் அ.காமாட்சி முனைவர் செ.கல்பனா நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
12. பண்பாட்டு அசைவுகள், தொ.பரமசிவன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.
13. புறத்திணையியல், கு.வெ. பாலசுப்பிரமணியம், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு.
14. தமிழில் காப்பியக் கொள்கைகள், து. சீனிச்சாமி, தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு.
15. தொகையியல், அ. பாண்டுரங்கன், திருவரங்கப் பதிப்பகம், புதுச்சேரி.
16. நாட்டுப்புறவியல் ஆய்வு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், 1983.
17. நாட்டுப்புறவியல், சு. சண்முகசுந்தரம், மணிவாசகர் பதிப்பகம், 1982.
18. நாட்டார் வழக்காறுகள், லூர்து, மணிவாசகர் நூலகம், 1988..
19. தமிழாய்வுத் திறனாய்வு வரலாறு, முனைவர். ம. மதியழகன், மித்ரா வெளியீடு, சென்னை, 2009.

## தாள் 3
## கற்பித்தல், கற்றல் திறன்கள்

**கற்றல் நோக்கங்கள் (Course Objectives)**

1. கணினியின் பாகங்களையும் பணிகளையும் உணர்தல்.
2. கணினியின் பயன்பாட்டினையும் பயன்படுத்துதலையும் உய்த்துணர்தல்.
3. கணினியுடன் கூடிய துணைக்கருவிகளை உபயோகப்படுத்த அறிந்து கொள்ளல்.
4. கற்றலிலும் கற்பித்தலிலும் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் திறனை வளர்த்துக்கொள்ளல்.
5. பேச்சாற்றல் திறனை வளர்த்தல்.
6. தகவல் தொழில்நுட்ப அறிவினைப் பெற்று அதன்வழி பாடங்கள் நடத்துதல்.
7. இணையத்தைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்துதல்.
8. பல்வகைப்பட்ட மாணவர்களுக்கேற்ப கற்பிக்கும் திறனை உணர்ந்து புரிய வைத்தல்.

**அலகு 1: கணினி பயன்பாட்டுத்திறன்**

தகவல் மற்றும் தொடர்புடைய (கம்யூனிகேசன்) தொழில்நுட்பத்தின் (ICT) முக்கிய அம்சங்கள் – வரையறை, பொருள் – விளக்கம், போக்குகள் – கற்பித்தல் மற்றும் கற்றலுடன் ICT ஒருங்கிணைத்தல் (ICT – Information and Communication Technology) – ICT பயன்பாடுகள் – சொல் செயலிகள் ஸ்ப்ரெட் தாள்கள் (Sheets) – வகுப்பறையில் பவர் பாய்ண்ட் ஸ்லைடுகள் – ஆய்விற்கு ICT – ஆன்லைன் பத்திரிக்கைகள் – இ-புத்தகங்கள் (Electronic Books) – பாடநெறி – பயிற்சிகள் – தொழில்நுட்ப அறிக்கைகள் – கருத்துக்கள்

மற்றும் விவாதங்கள் – ஆசிரியத்தொழிலில் வளர்ச்சியடைய ICTயைப் பயன்படுத்துதல் – ஆசிரியத்தொழிலில் வளர்ச்சி – கருத்து – கற்பித்தலில் போதிய ஆற்றலை வளர்த்தல் – சமூக வலைதளங்களைப் (Networks) பயன்படுத்தி தனித்திறமை வளர்த்தல் – ஆய்விற்குத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துதல் – திறந்த கல்வி வளங்களைப் பயன்படுத்துதல் (OER – Open Education Resource).

**அலகு 2: தொடர்புத்திறன்கள் (Communication Skills)**

தொடர்பாடல் (கம்யூனிகேஷன்) – வரையறைகள் – தொடர்பாடல் கூறுகள் – அனுப்புநர் – செய்தி – சேனல் (பாதை), பெறுநர் – கருத்து மற்றும் சத்தம் (சப்தம் – தேவையற்ற ஒலிகள்) – தொடர்பாடல் வகைகள் – பேச்சு மற்றும் எழுத்துச் சொற்கள் அல்லாத தொடர்பாடல் – உள்முக, தனிநபர், குழு மற்றும் தகவல் தொடர்பில் (Mass Communication) ஏற்படும் தடைகள் – சாதனங்கள் வழி, பௌதிக, மொழியியல் மற்றும் கலாச்சாரம் ஆகியனவற்றால் ஏற்படும் தடைகள் – தொடர்புத்திறன் – கவனித்தல், பேசுதல், எழுதுதல், சரளமாக எழுத மற்றும் பேசும் திறனை வளர்த்துக்கொள்ளும் முறைகள் – தனிநபர் பாணி, உச்சரிப்பு, சொல்வளம், சொற்களஞ்சியம் – வகுப்பறையில் உரை நிகழ்த்துதல் – உரையில் ஏற்ற இறக்கம்.

**அலகு 3: ஆசிரியரியல் (Pedagogy)**

கற்பித்தல் தொழில்நுட்பம்: வரையறை, குறிக்கோள், வகைகள் – கற்பித்தலுக்கும் விரிவுரை (போதனை) (Lecture) ஆற்றுதலுக்கும் இடையேயான வேறுபாடுகள் – விரிவுரை நுட்பம்: படிப்படியான நிலைகள் – விரிவுரை ஆற்றல் – பவர்பாய்ண்டு துணை கொண்டு விரிவுரை நிகழ்த்துதல் – பன்முக விரிவுரை நுட்பம்: செயல்விளக்கம் – சிறப்பியல்புகள்,

கோட்பாடுகள், திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு – கற்கும் மற்றும் கற்பித்தலின் நுட்பங்கள்: குழுவாகக்கற்பித்தல் – குழுவிவாதம், கருத்தரங்கு (Seminar), பட்டறை (Workshop), கருத்துக்கோவை மற்றும் குழு கலந்துரையாடல்.

**அலகு 4: மின்னணு வழி கற்றல்**

தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் இந்தியாவில் அமைந்துள்ள கல்வி வளங்கள் – மின்னணு கற்றல்: கருத்துக்கள், வகைகள் (ஒத்திசைவு, ஒத்திசைவற்ற கருத்துரையாற்றல் மற்றும் வழிகள்) –கைப்பேசி (செல்போன்) துணையோடு கற்றல் – கைபேசி செயலிகள் – கலப்பின கற்றல் – சுத்திகரிக்கப்பட்ட கற்றல் – மின்னணுக்கற்றலுக்கான கருவிகள் – (LMS கற்றல் முகாமைத்துவ முறைமை, சொல் செயலாக்க மென்பொருள், விளக்கக்காட்சிகள் தயாரித்தல், இணையத்தில் திருத்தம் செய்தல் ...) துறைசார்ந்த மின்னணு கற்றல் கருவிகள் – மின்னணு கற்றலின் தரம் அறிதல் – கற்பித்தலில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்தல் – நுண்ணறிவு – கற்றல் செயல்முறை – தொழில்நுட்ப ஒருங்கிணைப்பை நெறிப்படுத்தும் கட்டமைப்பு (T PACK; SAMR) – TIM தொழில்நுட்பத்தைத் திறம்பட ஒருங்கிணைக்க பாடங்கள் (TIM – Technology Integration Management).

**இந்தியாவில் காணப்பெறும் கல்விவளம்**

MOOC, NMEICT, NPTEL, e-pathshala, SWAYAM, SWAYAM Prabha, தேசியக்கல்வி வைப்பு நிதி (NAD), தேசிய இணையக்கல்விக் கழகம் (NDL), e-Sodh Sindhu, உயர்கல்வி மின்னணு வளம் – Virtual Labs – வர்ச்சுவல் லாப்ஸ் – மெய்நிகர் ஆய்வகம் – e-yantra – Talk to a Teacher – Moodle – mobile apps etc. – கைப்பேசி செயலி – இன்னும்பல.

**அலகு 5 :கற்பித்தல் திறன் மற்றும் தொழில் சார்ந்த மதிப்பீடு**

கற்பித்தல் திறன்: வரையறை – பொருள் தன்மை – கற்பித்தல் திறன்: (வகைகள்: உரை தொடங்குதல், கற்கத்தூண்டுதல், ஊக்கம் ஊட்டுதல் – விளக்குதல் – கேள்வி கேட்கத் தூண்டுதல் – கரும்பலகையில் எழுதி விளக்குதல் – உரையை முடித்தல்) கற்பிக்கும் திறன்களை ஒருங்கிணைத்தல் – கற்பிக்கும் திறனை மதிப்பிடுதல் – மதிப்பிடுதலின் நுட்பம்: மதிப்பிடுதலின் வழிமுறைகள் – தேவைக்கேற்ப மதிப்பிடுதலில் மாற்றம் – கற்கும் திறனை மதிப்பிடுதலில் தொழில்நுட்பத்தின் பங்கு – தன்னையும் தனக்கு இணையானவர்களையும் மதிப்பிடப் பயன்படுத்தும் கருவிகள் – (பதிவு செய்யும் கருவிகள், e-rubrics (மின்-ரூபிக்) – ஆன்லைனில் மதிப்பிடுதல், மென்பொருள் பயன்பாடு, ஆன்லைன் தேர்வு (நேர்முகத்தேர்வு, Report folio, அமைத்தல் பொது மதிப்பாய்வு செய்ய கருவிகள்) வலைப்பதிவுகள் மற்றும் கருத்தரங்கு விவாதம் மூலம் கற்பதை மதிப்பீடு செய்ய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல், கற்றலைப் பகுப்பாராய்தல்.

**கற்றல் விளைவுகள் (Course Outcome)**

1. இணைய அறிவைப் பெறுவர்.
2. புதிய தகவல் தொழில்நுட்ப அறிவைத் தேர்ந்து தெளிவர்.
3. கற்பித்தலில் நவீன உத்திகளைப் பயன்படுத்துவர்.
4. பரந்துபட்ட அறிவைப் பெறுவர்.
5. இணையம், மின்நூலகம் வழி புதிது புதிதாகக் கற்பர்.
6. மாணவர்கள் மனம் புரிந்து கொள்ளும்படிக் கற்பிப்பர்.
7. கணினிப் பயன்பாட்டினை அறிவர்.
8. பேச்சாற்றலை வளர்த்துக் கொள்வர்.

**பரிந்துரை நூல்கள்**


1. கல்வியியல் புதுமைகள், கி. நாகராஜன் – கல்வியியல் புதுமைகள் – ராம் பதிப்பகம், காந்தி நகர், சாலிக்கிராமம், சென்னை 93, 2003.
2. கல்வியியல் புதுமைகள் மேலாண்மை மற்றும் மதிப்பீடு எஸ்.ஆரோக்கியசாமி –முத்துலட்சுமி பதிப்பகம், பாளையங்கோட்டை.
3. கல்வியும், சமூகமும், எஸ். சந்தானம் ,சாந்தா பதிப்பகம், சென்னை 14,
4. கணிப்பொறி தகவல் தொழில்நுட்பம், ச. பாஸ்கரன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, 1998.
5. கணினியும் தமிழ் கற்பித்தலும், சு.ப. திண்ணப்பன் ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1995.
6. தமிழில் கணிப்பொறியியல், உமா பதிப்பகம், தஞ்சாவூர், 2003.
7. கணிப்பொறியில் தமிழ், உமா பதிப்பகம், தஞ்சாவூர், 2003.
8. மக்கள் ஊடகத் தொடர்பியல் (அடிப்படைகள், புதிய பரிமாணங்கள்) – அ. சாந்தா, வீ. மோகன் மீடிய பப்ளிகேஷன்ஸ், மதுரை 7, 2001.
9. தகவல் தொடர்பியல், வெ. கிருட்டிணசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.
10. தகவல் தொடர்புகளும், முனைவர் ச. ஈஸ்வரன், நெறிமுறைகளும், சாரதா பதிப்பகம், சென்னை-14.
11. தமிழ்க்கணினி இணையப் பயன்பாடுகள், முனைவர் துரை. மணிகண்டன், த. வானதி, கமலினி பதிப்பகம், தஞ்சாவூர்.
12. இணையமும் இனிய தமிழும், முனைவர் க. துரையரசன், இசைப்பதிப்பகம், கும்பகோணம்.
13. முனைவர் மு. பழனியப்பன், கணினியும் இணையமும், மீனாட்சி பதிப்பக வெளியீடு, புதுக்கோட்டை.